

சென்னை சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகக் கூட்டரங்கில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் நரிக்குறவர் நல வாரிய கூட்டம் 23.08.2024 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, மிக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் வா.சம்பத், ஆதிதிராவிடர் நலத் துறை இயக்குநர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு இணை செயலாளர் திருமதி ச.வளர்மதி, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச.அண்ணாதுரை, அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மயிலாடுதுறை கூறைநாடு ஏ.ஜி.ஜெ. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.ராமலிங்கம், மாநில நிர்வாகிகள் குத்தாலம் கா.அன்பழகன், ஜெகவீரபாண்டியன், ஆர் அருள் செல்வம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என்.சிவபாலன், எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்து. மகேந்திரன், மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, ஆக. 25-

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருச்செந்தூர், திருவை குண்டம், ஒட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகளில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுமாறு மாவட்டச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

2025 ஜனவரி 1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி ஆகஸ்ட் 20-ம் தேதி முதல் அக்டோபர் 18-ம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர்பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை மறு சீரமைத்தது வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29-ம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் 28-ம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. (வாக்குச்சாவடி வாரியாக சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்) 2025-ம் ஆண்டு ஜனவரி 6-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

ஆகவே அக்டோபர் 29-ம் தேதி முதல் நவம்பர் 28-ம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களிலும் சேர்க்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன்கூடிய 10 அல்லது 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை கொடுக்கலாம். 25 வயதிற்கு கீழ் உள்ள வீண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதற்கான இணையதள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி, உள்ளிட்ட ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளில் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் (BLA-2) இணைந்து மேற்கொண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் தீவிரமாக ஈடுபட்டு நிறைவேற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட 53 ஊராட்சிகளில் ரூபாய் 26.04 கோடி மதிப்பீட்டில் 744 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் கட்டுவதற்கான பணி ஆணைகளை கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ வழங்கினார்.

# ‘அகரமுதலி’ இயக்ககச் செயற்பாடுகள் - எதிர்காலத் திட்டங்கள்!

## தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு!

சென்னை, ஆக. 25 -

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் 23.08.2024 அன்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.இராஜாராமன், தமிழ்வளர்ச்சி இயக்கக இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

‘அகரமுதலி’ இயக்ககத்தில் உள்ள மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் திருவுருவச் சிலைக்கும், திருவுருவப் படத்திற்கும் அமைச்சர் அவர்களும், அரசு செயலாளர் அவர்களும் மாலை அணிவித்தும், மலர் தூவியும் புகழ் வணக்கம் செலுத்தினர்.

அகரமுதலி இயக்ககச் செயற்பாடுகள், வெளியீடுகள், சொற்குவைத் திட்டத்தின் பரவலாக்கம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்து அவற்றை மேம்படுத்துவது குறித்துக் கலந்தாய்வு நடத்தியதோடு, எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் அமைச்சர் கேட்டறிந்தார்.

மேலும், அகரமுதலி இயக்கக அகராதிகளைக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அரசுப் பொது நூலகங்கள் வழியாக மாணவர்களிடம் கொண்டுசேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மும்முரப்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

தமிழ்வளர்ச்சித் துறை அலுவலகங்களான தமிழ் வளர்ச்சி இயக்ககம், உலகத் தமிழ்ச் சங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பிற அரசு நிறுவனங்களில் உள்ள விற்பனை மையங்களில் இவ்வியக்கக அகராதிகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

கல்லூரிக் கல்வி இயக்ககம் வழியாகத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும் அகரமுதலி இயக்கக அகராதிகளை வழங்குவதற்கும், அரசால் நடத்தப்பெறும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பயிற்சி மையங்கள், அண்ணா மேலாண்மை பயிற்சி மையம் போன்ற இடங்களிலும் இவ்வகராதிகளைப் பயன்பாட்டுக்குக் கொண்டுசேர்க்கவும் ஆவன செய்யுமாறு குறிப்பிட்டார்.

அகரமுதலி இயக்ககப் பொன்விழா ஆண்டை இந்தாண்டு தமிழ் அகராதியியல் நாள் விழாவோடு இணைத்துச் சிறப்பான முறையில் கொண்டாடவும், இவ்வியக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5இலிருந்து 10ஆக உயர்த்தி அதன் செயற்பாடுகளைப் புத்தாக்கம் செய்யவும், பொன்விழா ஆண்டை முன்னிட்டு அகரமுதலி நூல்களை 50 விழுக்காடு சிறப்புக் கழிவில் விற்பனை செய்யவும், காலத்திற்கேற்ற வகையில் மேம்படுத்தப்பட்ட ஆங்கிலம் - தமிழ் அகராதி, தற்காலத் தமிழ் அகராதி ஆகியவற்றை உருவாக்கி வெளியிடவும், வருங்காலங்களில் இயக்கக வெளியீடுகள் அனைத்திலும் விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) இடம்பெற நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார்.

தமிழிலுள்ள 70 விழுக்காடு சொற்களுக்கு வேர்ச்சொல் கண்டறியப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்ட நிலையில் அப்பணியை 100 விழுக்காடு நிறைவு செய்யவும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

## இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மு.இளங்கோ அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகிப்பதால், அவரை மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **அப்துல் ரஹ்மான்** (6/150, பனையங்கால், கும்பிடுமதுரை அஞ்சல், கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்
தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

## தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட டாக்டர் செ.வல்லபன் அவர்கள், ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக,

**டாக்டர் ஆர்.கே. திலிப்குமார்**, எம்.பி.,பி.எஸ்., எம்.பி.ஏ.,
14, 6வது குறுக்குத் தெரு,
வள்ளுவர் கோட்டம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை
600 034. அவர்கள் **தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளராக தலைமைக் கழகத்தால்** நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில மருத்துவ அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைஅமைப்பாளராக நியமிக்கப்பட்ட சந்திரசேகர், மாவட்ட இலக்கிய அணி துணைஅமைப்பாளராகவும் பொறுப்பு வகிப்பதால், அவரை மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **டி.தயாளன்,** (125, சோழா ரியல் எஸ்டேட், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை மாவட்டம்) அவர்கள் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை. கலியமூர்த்தி
### ஆகஸ்ட் 25 (1989)



**பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.**

**பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக மூன்று முறையும், சிதம்பரம் நகரச் செயலாளராக இரண்டு முறையும் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு, மொழிப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை மறியல் போன்ற போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1977ல் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் – 1986ல் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.சி.இளங்கோவன் (எ) ஏழுமலை
### ஆகஸ்ட் 25 (2016)



**ஒருங்கிணைந்த செங்கை–அண்ணா மாவட்டத்தில் உள்ள வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**இவர், அரசுப் பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, துறையின் பல்வேறு நடவடிக்கைகளையும் மீறி கழகம் அறிவித்த ஆர்ப்பாட்டம், போராட்டங்களில் பங்கு கொண்டார்.**

**இவர் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, சைக்கிளிலேயே பயணம் செய்து கழகத்தை வளர்த்ததுடன், இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**